# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2019 கன்னி (15-9-1988) ஓர் உருபா (இதழ் எண்: 110)

## தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பொழிலனும் முகிலனும் அறிவழகனும் திடுமென வைக்கப் பட்டனர்!

## அரசின் திடீர் நடவடிக்கை!

### போராளிகளை வெளியில் விட விலை பேசப் படுகிறது!

### நாறுகிறது நாடு! சிறுகிறது சட்டம்! எங்கும் எதிலும் அடக்குமுறை! ஊழல்!

**இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் கேடு செய்பவர் இராசீவே! அவரே முதலில் தேசியப் பாது காப்புச் சட்டத்தின் கீழ் வைக்கப்பட வேண்டியவர்!**

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க

# ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள் !

(அண்மையில் தளைப்படுத்தப்பட்ட, நம் மகன் **பொழிலனும்** அவர் நண்பர்கள் சிலரும் மதுரை, நடுவண் சிறையில் காவலில் வைக்கப் பெற்றுள்ளனர். அங்கிருந்து பொழிலன் நமக்கெழுதிய மடல்கள் சில, அவர்களின் உணர்வுத் தெறிப்புகள், கருத்துகள் இப்பொழுதுள்ள நிலையில் எவ்வாறு இருக்கின்றன என்பதை உணர்த்துகின்றன. அவற்றை நம் அன்பர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவை இங்கு வெளியிடப் பெறுகின்றன; காலத்தால் உணர வேண்டிய கருத்துகள் சில அவற்றில் உள்ளனவா என்பதைப் பாருங்கள். மடல்கள் அனைத்தும் சிறையதிகாரிகளின் ஆய்வுக்குப் பின் நமக்கும் கிடைத்தவை. —ஆசிரியர்.)

மடல்: 2 மதுரை நடுவண் சிறை.
23-7-88.

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு,

வணக்கங்கள். தங்களின் 21-7-88-ஆம் நாளிட்ட இரண்டாம் மடல் கிடைக்கப் பெற்று மிகவும் மகிழ்ந்து அனைவரும் படித்தோம். மடல் (23-7-88)மாலை வந்தது. தங்களின் அறிவுரைகளை ஒரு முறைக்கு இருமுறை படித்து அசைபோட்டுக் கொண்டுள்ளேன். இங்கு நூலகத்திலிருந்தும் நூல்களை எடுத்துப் படித்துக் கொண்டுள்ளோம். 'வீக்லி' யைப் பலமுறை படித்தோம். தங்களின் நேருரை சிறப்பாக இருந்தது; செய்தியும் ஓரளவு செவ்வனே தொகுக்கப் பெற்றிருந்தது.

தங்களின் மடல் வருவதற்கு முன்பாகவே, இன்று பகல் வழக்கறிஞர் திரு. இராமதாசு வந்து பார்த்தார். விரிவாகப் பேசவில்லை. எப்பொழுது பிடித்தார்கள் என்றும், பிணையலில் எடுப்பது பற்றியும் கேட்டுவிட்டு உடனே சென்று விட்டார். மருத்துவரும், திரு. இளங்கோ அவர்களும் என்னைக் காணவில்லை. ஆனால் அவர்கள் அவருடன் வந்து வெளியே நின்றிருந்ததை நான் கண்டேன். அதன் பிறகு — தங்களின் மடல் வந்த பிறகுதான் செய்தி அறிந்தேன்.

நாங்கள் மிகவும் தென்போடும் உறுதியோடும் மகிழ்வோடும் உள்ளோம். இங்கு எவ்வகைத் தொல்லையும் இல்லை. ஆனால், இன்னமும் எங்கள் மீது ஐயப்பாடும் அச்சமும் சிறைத் துறைப் பொறுப்பாளர்களுக்கு இருக்கின்றன. எங்களை வேறு யாரோடும் பேச விடுவதும் இல்லை. தென்மொழி, தமிழ்நிலம் இதழ்கள் இன்னும் கொடுக்கவில்லை. விரைந்து கொடுத்து விடுவதாக சிறையதிகாரி(Jailor) ஐயா கூறியுள்ளார். அவர்கள் மிகவும் அன்புடன் எங்களைக் கவனிக்கிறார்கள்.

தாங்கள் எழுதியதுபோல் நிறைவு என்பது நாங்கள் பதினொருவர் கலந்துரையாடிப் பேசி மகிழ்வதாக இருப்பதால் பார்வைக்கு வராததோ, பிறவோ பெருந்தொல்லையாக இல்லை. பெரும்பாலும் காண வருவோர் அனைவரும் மதுரைக்கு மிகுந்த தொகை செலவிட்டு வந்து போவதும், பொருள்கள் வாங்கி வருவதுமான அவர்கள் படுகிற தொல்லை தான் மிகவும் வருத்தமாக உள்ளது.

எழுத்தளவிலும் கருத்தளவிலும் நெருக்கமான இறுக்கமான தங்களின் மடல் எங்களின் மனங்களை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

ஈரோடு மாநாடு (பார்ப்பன எதிர்ப்பு மாநாடு) சிறப்புற அமைந்திருக்கும் என நம்புகிறேன். மக்கள் உரிமைக் கழகத்தின் புதிய இத் திருப்பம் (தங்களை அழைத்து மாநாடு நடத்தியது) மிகவும் வரவேற்கத் தக்கது.

பெரும்பாலும் எல்லாரையும் பார்க்க அனைவரும் வந்து போகின்றனர் — எனவே யாருக்கும் வருத்தம் இல்லை. அன்புடன். **பொழிலன்.**

**(அதே மடலில் தன் தாய்க்கு எழுதியவை)**

அன்பு அம்மா,

என்னுடைய மூன்றும் மடலில் எதுவும் தங்களுக்கு எழுதாதது கண்டு தாங்கள் வருந்தியிருக்கலாம். உடனே தங்களுக்கெனத் தனி அட்டை அனுப்ப எண்ணியதால்தான் அதில் ஒன்றும் எழுதவில்லை. நான்காம் மடலில் தங்களுக்கும் பிறைக்கும் எழுதியிருந்தேன்.

அம்மா! எங்களைப் பற்றி எதுவும் கவலைப்பட வேண்டாம். நாங்கள் அனைவரும் அருகருகே உள்ள அறைகளில் அறைக்கு மூவராக உள்ளோம். காலையில் மூன்று மணி நேரத்திற்குக் கொஞ்சம் குறைவகாவும், பகல் $1\frac{1}{2}$மணி நேரமும், மாலை $1\frac{1}{2}$மணி நேரமும் ஒரு பெரும் சுற்றடைப்புக்குள் அறைகளிலிருந்து திறந்து விடப்படுகிறோம். தண்ணீர் பெரிய தொட்டியில் உள்ளது. கழிவறைகள் ஒவ்வோர் அறையிலும் உண்டு; வெளியேயும் உண்டு. அதனால் எவ்வகைத் தொல்லையும் இல்லை. மிகவும் மகிழ்வாக உள்ளோம்.

மக்கள் மீது அக்கறையும் அன்பும் கொண்டுள்ள மாந்தன் ஒருவனால்தான் உண்மையான அன்பு — அஃதாவது குடும்பத்தின் மீது அன்பு செலுத்த முடியும். காரணம் அவ்வன்பு எதிர்பார்ப்பு அற்றது. பிறநிலை அன்போ எதிர்பார்ப்போடே அமைந்திருக்கும். ஓர் அரசியல்காரனோ, பெரும் பணக்காரன் ஒருவனோ உறுதியாகத் தன் குடும்பத்தின் மீது பற்றோ அன்போ வைத்திருக்கவே முடியாததற்கு, அவர்கள் மக்கள் மீது அன்பு வைப்பதே இல்லை; மக்கள் வாழ்வில் அக்கறை கொள்வதும்

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ஏறத்தாழ மூன்று மாதங்களாகச் சிலரும், கடந்த ஐந்து மாதங்களாகப் பலரும் நேருசிலை, கொடைக்கானல், கோவை, நீலமலை — குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகளுக்காக நம் போராளிகள் சிறையில் வாடுகின்றனர். இவர்களுள் ஏற்கனவே இளங்கோ தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வைக்கப் பட்டுள்ளார். அண்மையில் கடந்த 1-9-88 முதல் பொழிலனும் முகிலனும் அறிவழகனும் அதே தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வைக்கப் படுவதற்கு அரசு திடுமெனக் கட்டளை பிறப்பித்திருக்கிறது. இவர்கள் அனைவரையும் இவ்வாறு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் (N. S. A. வின்) கீழ் வைப்பதற்கு அரசு யாதொரு சரியான காரணத்தையும் காட்டவில்லை. அரசின் இன்றைய நடைமுறைப்படி எவரும் எப்பொழுதும் எதற்காகவும் எந்தக் காரணம் இன்றியும் எந்தக் கருப்புச் சட்டத்தின் கீழும் சிறைவைக்கப்படலாம்; துன்புறுத்தப் படலாம்; தீர்த்துக் கட்டவும் படலாம் என்று தெரிய வருகிறது.

சென்ற கிழமை தம் தனிப் பொறுப்பின் கீழ் கட்டுப்பாட்டுப் பிணையலில் வெளிவந்துள்ள நம் திருச்சி அன்பர் ஒருவர், தம் மனைவி மக்களைப் போய்ப் பார்த்துவர அங்குள்ள காவல்துறை அதிகாரியிடம் இசைவு கேட்டதற்கு அவரால் அடிக்கப் பட்டு இசைவு மறுக்கப் பெற்றுள்ளார். நம் வழக்கறிஞர் ஒருவர் மதுரையில் உள்ள போராளிகளைப் பார்க்க இசைவு கேட்டதற்கு, அவர்கள் அங்கு இல்லை, சென்னைச் சிறைக்கு மாற்றப்பட்டு விட்டார்கள்; இன்னும் சிலர் விடுவிக்கப் பட்டு விட்டார்கள் — என்று அங்குள்ள சிறைப் பொறுப்பாளர்கள் பொய் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் பேச்சை உண்மை என்று நம்பிக் கொண்டு சென்னை வந்த நம் வழக்கறிஞர், சென்னை நடுவண் சிறைக்குப் போய் அங்கும் அவர்கள் இல்லாததைக் கண்டு, அதிர்ச்சியும் கலவரமும் அடைந்தவராய் நம்மிடம் வந்து கேட்டு உண்மை உணர்ந்து அமைதி பெற்றார். இவ்வாறெல்லாம் காவல் துறை அதிகாரிகளும் சிறைத்துறை அதிகாரிகளும் இட்டது சட்டம் வைத்தது வரிசை என்றபடி அரசு அவர்களை இயங்க விட்டிருக்கிறது என்றால்,இந் நாட்டு ஆட்சி அமைப்பையும், இதன் அனைத்ததிகாரத் தந்நலத் தலைமையர்களையும் என்னென்று மதிப்பிடுவது?

இங்குள்ள ஆட்சியதிகாரிகளை அப்படி யொன்றும் உண்மையாளர்களாகவும் நேர்மையாளர்களாகவும் மதிப்பிட முடியாது. சில இடங்களில் நம் போராட்டக் காரர்களைப் பிணையலில் வெளியில் விடவும், வழக்கின்றி விடுவிக்கவும் ஏராளமான தொகை பேரங்கள் பேசப்பட்டு வருவதாகவும் கேள்விப் படுகிறோம். இதுவும் இவ்வதிகாரப் பிரிவினரின் கீழ்மைத் தனத்தை நன்கு காட்டுகின்றதன்றோ?

அரசியலில் மட்டுமல்லாமல், ஆட்சியதிகார, அறநெறித் துறைகளில் எல்லாம் கூட, கிழறுப்பும், கழுத்தறுப்பும், கையூட்டும், தந்திர மந்திரச் செயல்களும் நாளுக்கு நாள் மிகுதிப்பட்டு வருவதைக் கண்கூடாகப் பார்த்து நல்லவர்கள், இந்நாட்டு மக்களின் மேல் அன்புள்ளவர்கள், உள்ளம் நைந்து, உணர்வு நடுநடுங்கி, அறிவு திசைந்து, வாழ்க்கை தடுமாறி, வகையின்றி நிற்கின்றனர். ஊழல் நரகலில் நாடே நாறிக் கிடக்கிறது. நல்லவர்கள், நடுநிலையாளர்கள், அறிஞர்கள், முதலிய அனைவர் மேலும் கருப்புச் சட்டங்கள் சீறி வருகின்றன!

இந்நிலையில்தான் நாட்டுக்கு எவ்வகைக் கேடும் செய்யாத 17 அகவை முதல் 22 அகவை வரையிலுள்ள நம் இளங்கொழுந்துகளைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைக் காட்டி மிரட்டுகிறது அரசு!

நேரு சிலைக்குக் குண்டு வைத்தார்கள் என்பதற்காகத் தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்றால் என்ன கொடுமை? அதனால் எந்தத் தேசியத்திற்கு இழப்பு வந்து விட்டது? அப்படித்தான் நேருசிலையில் என்ன பழுது ஏற்பட்டு விட்டது? அதன் அடித்தளக் கல்லில் பெயர்ந்தது ஒரு சில்லு! சிலையா சிதர்ந்து சுக்கு நூறாகி விட்டது? அதே போலுள்ள கலைஞர் சிலை உடைத்துத் தூள்தூளாக்கப் பட்டதே அதற்கு ஏன் மிரட்டல் நடவடிக்கை கூட எடுக்கப் படவில்லை? என்ன நயன்மை இது? கலைஞர் சிலையும் நேரு சிலையும், சிலை என்னும் வடிவில் ஒன்று தானே? அஃது என்ன பித்தளை? இது என்ன தங்கம்? அதன் சிதைவுக்கு ஒரு சிறு நடவடிக்கை கூட இல்லை; இதற்கு மட்டும் என்ன தேசியப் பாதுகாப்புச்சட்டம்? என்னய்யா நாடு இது? என்னய்யா ஆட்சி?

அரசியலில்தான் தில்லுமுல்லுகள் நடக்கின்றன; யாராலும் தடுக்க முடியவில்லை; தட்டியும் கேட்க இயலவில்லை. சட்டத்திலுமா தில்லு முல்லுகள்? தெள்ளவாரித் தனங்கள்? அறமுறையிலுமா அதிகாரக் குறுக்கீடுகள்! அழிம்புச் செயல்கள்! எங்கே அடுக்கும் இது? எவரிடம் முறையிடுவது? கொள்ளைக்காரனே அரசனானால் திருட்டுக்கு யாரிடம் ஞாயம் கேட்டது?

இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் இவர்களால்தான் ஏதம் (அபாயம்) கேடு வந்து விட்டதாம்! அதனால்தான் தேசியப் பாதுகாப்புச் சட்டம் இவர்கள் மேல் பாய்ந்திருக்கிறது. போபர்சு ஊழல், எண்ணெய்ப் பேரக்கொள்ளை, எலிகாப்டர் கையூட்டு முதலிய செய்திகளெல்லாம் தேசியத்திற்குப் பாதுகாப்போ? நேரு சிலையின் அடிக்கல்லில் ஒரு துணுக்கு பெயர்ந்ததால்தான் இந்தியா கொள்ளை போய் விட்டதோ? இழப்பு பெரிதில்லை;

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை. அவ்வகையில் மக்கள்நலச் சிந்தனையாளன் ஒவ்வொருவனும் தன் குடும்பத்தையும் மக்களையும் மிகவும் அன்புடன் விரும்புவான். அப்பா அவர்கள் உலகியல் நூறில் எழுதியது போன்று **'தாயன்பே அன்பு'.** அவ்வன்பை நான் நினைக்காத நேரம் இல்லை. என் இயக்கம் அனைத்தும் அறிவும் அன்புமே. அறிவும் அன்பும் ஒவ்வொரு சிந்தனையாளனுக்கும் மாந்தனுக்கும் அடிப்படையானவை. அதன் அடிப்படையில் நாங்கள் அறுவரும் பெறற்கரிய, அன்பும் அறிவுமான - கூட்டாகத் - தங்களையும் எம் அரும் பெறல் தந்தையையும் பெற்றோம்.

நீங்கள் எதுபற்றியும் கவலை கொள்ள வேண்டாம். நாங்கள் மிகவும் நலமுடன் உள்ளோம். நன்றுகச் சாப்பிடுகிறோம். காலை சோறு அல்லது பொங்கல்; பகல் உணவு குழம்பு, மோருடன். மாலை சோறு குழம்புடன். மாலை 4-மணிக்கு மணிலாப் பயிறு. மிகவும் நிறைவாக உள்ளது. எனவே நீங்கள் அது பற்றியெல்லாம் கவலைப் படாமல் நன்றுகச் சாப்பிடவும். உடலை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்; மருந்து சாப்பிடுங்கள். அதிகமாக, கடுமையாக உழைத்துக் கொண்டிருக்க வேண்டாம். உழைப்புக்கேற்ற ஒய்வு கொள்ளுங்கள். வீணுக மன உலைவு கொள்ளாதீர்கள். அப்பாவிற்குக் கட்டி வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அன்பு உள்ளத்தோடேயே என் உணர்வுகள் வட்டமிட்டுக் கொண்டுள்ளன. நான் அங்கேயே உள்ளது போல் தான் எண்ணிக் கொண்டுள்ளேன். என் அன்பு மனம் உங்களிடம் எல்லாம் பேசிக் கொண்டே உள்ளது. அதனால் எதுபற்றியும் எண்ண வேண்டாம்.

பிறை நன்றுகச் சாப்பிடு, படி, ஓய்வெடு. அம்மாவிடம் அன்பாக நடந்துகொள். அப்பாவைப் பொறுப்போடு கவனி. செந்திடம் சண்டை செய்யாதே. செந்து! அம்மாவிற்கு அடிக்கடி வந்து ஆறுதல் கூறு..... அக்கா! உன்னை நினைக்கப் பெருமையாக உள்ளது. எனக்குள் துணிவும் கிடைக்கிறது. (மாநாட்டுச் சொற்பொழிவின் ஒலிகள் என் காதில் ஒலிப்பதன் மூலம்) உன் பிள்ளைகளையும் துணிவுடன் வளர். குமுக உணர்வைக் கற்பி. நம் பேச்சுகள் நம்மின அடிமை நீக்கத்தைப் பற்றி இருக்கட்டும் ......!

— பொழில்

**ஓர் உணர்வுள்ளத்தின் எதிரொலி:**

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய அய்யா பாவலரேறு அவர்களுக்குப் பணிவான வணக்கத்துடன் வரையும் மடல்!

தங்கள் அன்பு மகனர் தமிழ் மாவீரன் உயர்திரு. **பொழிலன்** அண்ணன் அவர்கள் தங்களுக்கு விடுத்த மடலினைத் **தமிழ்நிலம்** ஏட்டின் வாயிலாக அறிந்து களிப்பும் கண்ணீரும் அடைந்தேன். என்றுதான் நம் தமிழர் ஒன்று கூடி நாட்டுரிமை கோரி எழுந்து வருவரோ? தெரியவில்லை.

அடுத்த அரசியல் வழித்தோன்றலாகத் தத்தம் மைந்தர்களை உருவாக்கி வரும் இற்றை நாளில், தமிழ்நிலம் பெற்றிட மகனைத் தாம் கண்ட புலியாக உவந்தளித்த உங்கள் தமிழ் உணர்வைத் தலை வணங்கிப் போற்றிடக் கடன்பட்டுள்ளோம்.

நீரும் நும் துணைவியாரும் மைந்தனைப் பிரிந்து வாடும் கோழைகளல்லர். எனினும் உங்களுக்கு ஒரு கோடி தமிழிளைஞர்கள் உண்மை மைந்தர்களாக இருந்து உங்களது குறிக்கோள் காத்திட என்றும் துணை இருப்போம். உண்மை. இஃது அஞ்சற்க! வாழிய நும் தமிழ்ப் பணி! வணக்கம்.

தமிழர் நலப்பணியில் தங்கள் வழித் தொண்டன்.

— ஐ. து. பாபுமாசிலாமணி, மதுரை-10.

# அனைத்தையும் நீயே அழிப்பதா?

**- பாவலர். தமிழியக்கன் -**

தமிழ்நிலத் தம்பீ! தமிழ் நிலத் தம்பீ!
தயங்கிடா மல்கேள்! உரைக்கிறேன்!
உமிழ்கிறுர் பாரோர் தமிழினம் கண்டே!
உணர்ந்திலே! உனக்கா மறைக்கிறேன்?

திரைப்படம் என்றும் தெருப்படம் என்றும்
திரிந்துநீ பொழுதைக் கழிக்கிறுய்!
திரைப்பட நடிகர்க் கெனப்பல மன்றம்
திறந்துநல் வாழ்வை அழிக்கிறுய்!

அரசியல் என்றும், அழி குடி என்றும்
அலைந்துயர் வாழ்வைச் சிதைக்கிறுய்!
புரைச்செயல் என்றே புரிந்தவர் சொன்னல்
புரட்சியென் றவர்பால் கதைக்கிறுய்!

பொழுதினைக் கழிக்கப் புகழ்ச்செயல் அழித்தே
பொலிந்தநற் பேரைக் குறைக்கிறுய்!
விழுதென உலகில் விளங்குக என்றுல்
விரைந்துநீ புன்மை நிறைக்கிறுய்!

நெறிமுறை மாறி நடுநிலை மாறி
நிலத்தினில் நேர்மை புதைக்கிறுய்!
அறிமுறை மாறி அழிவினில் ஊறி
அறவழிச் சீர்மை சிதைக்கிறுய்!

விடுதலை பெறவே விரைந்துணர் வுறுக!
விழை! உயர்(வு) என்றுல் சிரிக்கிறுய்!
கொடுதலை,எளியோர் கொடுமைகள் குலையக்
கொதித்தெழு என்றுல் திரிக்கிறுய்!

தலைமுறை சிறக்கும் தகுவழி யாவும்
தவறெனை நீயே பழிக்கிறுய்!
அலைபெறும் மனத்தால் அகந்தையின் [உரத்தால்
அனைத்தையும் நீயே அழிக்கிறுய்!

# தமிழின வரலாறு மறைக்கப்படுகிறது, மாற்றப்படுகிறது.

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னால், உரோமப் பேரரசு எகிப்து நாட்டைத் தாக்கி வெற்றி கண்டதும், எகிப்து நாட்டின் அலெக்சாந்திரியப் பட்டினத்திலிருந்த புகழ்பெற்ற நூலகத்தைத் தீயிட்டு அழித்தது. இவ்வாறாகப் பழமை வாய்ந்த எகிப்திய இனத்தின் 'வரலாற்றையும், பெருமைகளையும் மறைக்கவும், மறுக்கவும் முனைந்தது உரோமப் பேரரசு. ஓரினம் இன்னோரினத்தை அடிமைப் படுத்தும் போது, அடிமைப்படுத்தப்பட்ட இனத்தின் வரலாற்றையும், பெருமைகளையும் மறைக்க முற்படுவதும், தன் இனத்தின் வரலாற்றைப் பெரிது படுத்திப் பரப்புவதும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நடந்து வருகின்றன.

1947-இல் ஆங்கிலேயன் வெளியேறி, வட இந்தியன் (அதாவது, 'இந்திக்'காரன்) ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து, வட இந்திய மன்னர்களான சந்திரகுப்தன் மற்றும் அசோகன் ஆகியோரின் வரலாறுகளும், பெருமைகளும் இந்தியாவெங்கும் (தமிழ்நாடு உட்பட) படிப்பிக்கப் படுகின்றன. ஆனால், தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியரைப்பற்றி வட இந்தியப் பள்ளிகள் ஏதுமே கூறுவதில்லை. ஆளுகின்ற இனம் (ruling race) தன் வரலாற்றைப் பெரிதாகப் பேசுவதும், ஆளப்படுகின்ற இனத்தின் (Subject racc) வரலாற்றை மூடி மறைப்பதும் புதிதானவையல்ல. ஆங்கிலேயன் இந்தியாவை ஆண்ட நாட்களில், இந்தியப் பள்ளிகள் ஆங்கிலேய மன்னர்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பயிற்றுவித்தன. தமிழனைப் பொறுத்த வரையில் அதே நிலைதான் இன்றும். ஆங்கிலேயன் ஆட்சி போய் வட இந்தியனின் ஆட்சி நம் மேலே வந்துள்ளது. விடுதலை பெற்றவன் வடஇந்தியன் மட்டும்தான். அவன் முழுக்க முழுக்க தன் தாய் மொழி-(இந்தி)யிலேயே படிக்கமுடியும். அரசுடன்தொடாபு கொள்ள முடியும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க முடியும். அவனது வரலாறு பள்ளிகளிலே கற்பிக்கப் படுகிறது. அவனது மூதாதையரைப் பற்றியும், மூதாதையரின் மொழி — பண்பாடுகளைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய 'இந்தி'ய அரசு, வட இந்திய, தென்னிந்திய, மற்றும் தமிழரின் வரிப்பணத்தைக் கோடிக்கணக்கில் செலவிடுகிறது. (தமிழினத்தின் வரலாறு, மொழி, பண்பாடுகள் பற்றிய ஆராய்ச்சிக்காக நூற்றிலொரு பங்கேனும் செலவிடப் படுவதில்லையே.) தென்னிந்தியர் மற்றும் தமிழரின் வரிப்பணங்களைக் கோடிக்கணக்காக வாங்கிடும் வட இந்தியரின் தில்லியரசு, அப் பணத்தினை வட இந்தியாவில் (குறிப்பாக உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய இந்தி பேசும் மாநிலங்களில்) தொழிற்சாலைகள் கட்டவும், நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தவும், சாலைகள் போடவும் பயன்படுத்துகிறது. இவ்வாறு, ஆங்கிலேயன் வெளியேறியதும் இந்திக்காரன் விடுதலையால் விளையும் நன்மைகளைச் சுவைக்கிறான். ஆனால், தமிழனோ ஆங்கிலேயனுக்கு அடிமையாயிருந்தது மாறி, இந்திக்காரனுக்கு அடிமையாக நிற்கிறான். நமது வரலாறு மறைக்கப் படுகிறது. நமது பண்பாடு சீரழிக்கப் படுகிறது. நமது உழைப்பும், பொருள் வளங்களும் வரியாக மாறி வடஇந்தியரின் நலனுக்காகச் செலவிடப் படுகின்றன.

ஆளப்படும் இனத்தின் (Subject race) வரலாற்றை மறைப்பது முதற்கட்டம். அவ்வரலாற்றைப் படிப்படியாக மாற்றி யெழுதுவது இரண்டாம் கட்டம். தமிழின வரலாற்றை மாற்றியெழுதும் முயற்சியை வட இந்தியர் தொடங்கியும் விட்டார்களெனத் தெரிகிறது.

சில ஆண்டுகட்கு முன், தமிழ் மாமன்னன் இராசராச சோழனின் ஆயிரமாண்டு விழா தஞ்சையில் நடை பெற்றது. அவ்விழாவில் பங்கெடுத்த இந்தியத் தலைமையமைச்சர், திருவாட்டி. இந்திரா இராசராச சோழனின் வரலாற்றை மாற்றியமைத்துக் கூறியது எம்மை அதிர வைத்தது. இராசராசனின் படைகள் வடஇந்திய மன்னர் பலரை வென்று, கங்கைக் கரை வரையிலும் சென்று மீண்டதைக் குறிக்குமாற்றான் அவனுக்குக் '**கங்கை கொண்ட சோழன்**' என்ற பட்டம் வழங்கப்பட்டது. தமிழ்மன்னன் இராசராசன் ஆயிரமாண்டுகட்கு முன்னால் வடஇந்திய மன்னர்களை முறியடித்தான் என்ற வரலாறு கூட இன்றைய இந்திக்காரர்களுக்குப் பொறுக்கவில்லை. அதனால், இராசராசன் 'கங்கை கொண்ட சோழன் எனப் பெயர் பெற்றமைக்கான காரணத்தைத் திரித்தும், மாற்றியும் கூறினார் இந்திரா. "**கங்கை நீரைக் கொண்டு வந்து கடவுள் சிலையைக் குளிப்பாட்டினான் இராசராசன். அதனாலேயே கங்கை கொண்டான் எனப் பட்டம் பெற்றான்**" என்றுரைத்தார் இந்திரா. இவ்வாறு கூறித் தமிழ்மன்னன் வட இந்திய மன்னர் பலரை முறியடித்த வரலாற்றை மூடி மறைத்தார். இராசராசன் கங்கையிலிருந்து நீரைக் கொண்டு வந்தது உண்மையேயாயினும், அவனது படைகள் கங்கை வரையிலுமுள்ள நாடுகளைக் கொண்ட முகாமை கருதியே கங்கை கொண்ட சோழன் என்ற பட்டம் பெற்றான் என்பதை எல்லா வரலாற்றாசிரியர்களும், வரலாற்று ஏடுகளும் தவறாமல் கூறுகின்றன.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

தொடர் : 7.

# "தமிழீழ மக்கள் விடுதலைப் புரட்சியும், இந்தி(ய) வல்லரசின் சூழ்ச்சிகளும்"

-- செ. அமிழ்தன். --

மேலும், அவர்கள் தங்கள் அனைவரின் பொது எதிரியாகிய இலங்கையரசை வீழ்த்துவதற்குரிய நடவடிக்கைகளைச் செம்மையான முறையில் மேற்கொள்ளாமல், தில்லி இந்தி(ய) அரசின் துணைக் கொண்ட இலங்கை அரசைப் பணிய வைக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர். இதனால் இவர்கள் தமிழீழத்துக்கான ஏற்பை (அங்கீகரித்தலை) தமது மக்களிடமிருந்தும், சிங்கள மக்களிடமிருந்தும் பெறுமல், தமிழீழத்தை ஏற்கச் சொல்லி, தில்லி இந்தி(ய) அரசின் காலடியில் நின்று மன்றுடினர். தமிழீழ விடுதலைக்குரிய மிகப் பெரிய ஆற்றலாக இந்தி(ய)த் தில்லியரசை நம்பினர். இதுவே தில்லியரசு அவர்களைக் கட்டுப்படுத்தும் அளவுக்குக் கொண்டு சென்றது. இதனால் தமிழீழ விடுதலைக்காகக் கிளர்ந்தெழுந்து தமிழகம் வந்த இப்போராளிகள் இன்று இந்தி(ய)த் தில்லியரசுக்கு முழுமையாக அடங்கிய அடிமைகளாகவே மாறி விட்டனர்.

தொகுப்பாகக் கூற வேண்டுமானால், தமிழீழ விடுதலைக்காகப் போராட எழுந்து வளர்ந்த இயக்கங்கள், தில்லியரசின் சூழ்ச்சிகளாலும், தாங்கள் செய்து விட்ட தவறுகளினாலும் இன்று தமிழீழ விடுதலைக்கே எதிரிகளாகி நிற்கின்றன.

## இச் சூழ்ச்சிகளினால் எழுந்துள்ள விளைவுகள்தாம் என்ன?

ஈழ விடுதலைக்காக வீரத்துடன் தோன்றிய இயக்கங்கள் தில்லியரசுக்கு மண்டியிட்டு நின்றதானது இந்தியா தனது வல்லரசு மேலாளுமையை இலங்கையில் நிறுவ வாய்ப்பளித்தது. இதன் விளைவாக இன்று இந்திய அரசப்படைகள் தமிழீழத்தில் இயங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்போது இந்தியப்படைகள் தமிழீழத்தில் தமிழ்ப் போராளிகளிடமிருந்து கருவிகளைக் கைப்பற்றுகிறோம் எனும் பெயரில் போராளிகளையும், பொது மக்களையும் வேட்டையாடிக் கொன்று குவித்துத் தமிழ் மக்களை மிரட்டி, அவர்களின் விடுதலையுணர்வை நசுக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. இதற்காகத் தற்போது ஒரு மூர்க்கமான தேசிய ஒடுக்கல் போரை ஈழ மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இப் படைகள் நாளை சிங்களத் தீவிரைவாளர் (தீவிரவாதி)களை ஒடுக்குகிறோம் எனும் பெயரில் இலங்கையின் உள்ளும் சென்று தன் கால்களைப் பரப்பி, 1971-இல் செய்தது போலவே சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்துச் சிங்கள மக்களை மிரட்டும் பணியில் ஈடுபடும்.

இதையெல்லாம் திட்டமிட்டுத்தான் இந்தியப் படைகள் — 1971-இல் இலங்கை சென்று உடனே திரும்பியது போலல்லாமல் — விரைவில் திரும்பாத அளவுக்கு இலங்கைக்குச் சென்றுள்ளன. இதனால் இனி நெடுங்காலத்துக்கு இந்தியப்படைகள் திரும்பாது. குறிப்பிட்டுக் கூற வேண்டுமானால் குறைந்தது பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்காவது இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறாது.

இனி இந்தியப் படைகள் மெல்ல மெல்ல தனது கால்களை இலங்கை முழுவதும் பரப்பும். அது நிறைவேறியபின் தில்லி இந்தி(ய) அரசு தனக்குச் சார்பான ஆட்சியை இலங்கையில் ஏற்படுத்தும். அதன்வழி இலங்கை தில்லியரசின் ஓர் அடிமை நாடாகும். தமிழீழம் அப்போது இல்லாத ஒன்றாகி விடும்.

## இவ்வுடன்பாட்டு வல்லாளுமையை முறியடிப்பதற்கான தீர்வுகள்தாம் என்ன?

ஈழப் போராளிகள் கடந்த காலங்களில் தாம் செய்த தவறுகளைக் களைந்து திருத்திக் கொண்டு தமிழீழ விடுதலைக்காக உறுதியோடு நின்று, இந்தியப் படைகளின் ஆளுமையை எதிர்த்துப் போராடும் இயக்கங்களோடு ஒன்றிணைந்து இந்தியாவின் வல்லாளுமையைத் தமிழீழத்தில் வெட்டியெறிய வேண்டும்.

அத்துடன் நில்லாது, இலங்கையின் சிங்கள முற்போக்கு ஆற்றல்களுடன் இணைந்து ஒரு வலிவான இந்திய வல்லரசு எதிர்ப்பு முன்னணியை அமைத்து சிங்கள மக்களைத் தமது நண்பர்களாக்கிக் கொண்டு இந்தி(ய)த் தில்லியரசின் வல்லாளுமையை எதிர்த்துப் போராட வேண்டும். அதன்வழி இலங்கையில் தில்லியரசின் ஊடுருவல்களையும் வெட்டியெறிய வேண்டும்.

இவ்வாறு இனி ஈழப்போராளிகளும், சிங்கள முற்போக்கு ஆற்றல்களும் இணைந்து போராடுவது மட்டுமே இந்திய — இலங்கை அரசுகளின் பிடியிலிருந்து தமிழீழத்தை விடுவிக்கச் செய்யும். மேலும் இந்திய — இலங்கை உடன்பாட்டு வல்லாளுமை ஊடுருவல்களிலிருந்து சிங்கள மக்களின் வாழ்வையும் காக்க இயலும்.

Scanned with CamScanner

இதற்கு உதவும் வகையில் இந்திய மக்கள் இடைவிடாது இந்தியப் படைகளைத் திரும்ப அழைக்கச் சொல்லிப் போராடுதல் வேண்டும். இப்போதுள்ள அரசியல் தலைமைகள் கோருவதுபோல் போர் நிறுத்தம் கோராமல், படைகளை முற்றுக விலக்கிக் கொண்டு திரும்பச் சொல்லிப் போராடுதல் வேண்டும். ஏனெனில் போர் நிறுத்தக் கோரிக்கையால் மட்டும் இலங்கைத் தீவத்தின் மீது நிறுவப்பட்டுள்ள தில்லியரசின் வல்லரசு மேலாளுமையை அகற்றி விடவோ, அல்லது தமிழீழத்தை வெற்றியடையச் செய்யவோ முடியாது. **இப்போது போர் நிறுத்தம் கோருகின்ற தலைமைகளே தில்லி ஆட்சியாளர்களாக வரும் போது, அவை இலங்கை மீது வல்லாளுமை செலுத்தவே அப்போர் நிறுத்தம் உதவி செய்யும்.** அத் தலைமைகள் வேண்டுமானால் இந்திய அமைதி காக்கும் படை என இயங்கும் இந்திய அரசுப்படைகளை "இந்திய அமைதி கண்காணிக்கும் படை" எனப் பெயர் மாற்றி இயங்கச் செய்யலாம். எனவேதான் படைகளை முற்றிலுமாக விலக்கித் திரும்பச் சொல்லிப் போராடுதல் வேண்டும்.

இதற்குத் **தமிழக மக்கள் மட்டும் போராடுவதால் பயனில்லை. இந்தியாவிலுள்ள அனைத்து இன மக்களும் கிளர்ந்து போராடுவதன் மூலம் மட்டுமே இது வெற்றி பெற இயலும். அவ்வாறு போராடுவது மட்டுமே தில்லி(யிலுள்ள) அரசைப் படை விலக்கலுக்கு ஒப்புக் கொள்ளச் செய்யும்.** இதற்காக வேண்டிய முயற்சிகளைத் தமிழகத் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இந்தியாவிலுள்ள முற்போக்கு ஆற்றல்கள் ஒன்றிணைந்து, தில்லி வல்லரசுக்கு எதிராக ஒரு வல்லரசு எதிர்ப்புக் கூட்டணியை உருவாக்கி, இந்தி(ய)ச் சிறையில் அடைபட்டுள்ள நாட்டின மக்களின் உரிமைகளுக்காகப் போராட வேண்டும்.

தமிழகத் தமிழ் மக்கள் தாம் ஒரு நாட்டின மக்கள் எனும் அடிப்படையில், தமது கடந்த காலப் போராட்டங்களின் பட்டறிவுகளைச் செழுமைப் படுத்தி இந்தி(ய)த் தில்லியரசின் கொடிய கருப்புச் சட்டங்களை எதிர்த்துத் தமிழக **விடுதலையை முன் வைத்துப் போராட வேண்டும்.**

இவ்வகையில் ஈழப்போராளிகளும், இலங்கைச் சிங்கள மக்களும், தமிழக மக்களும், இந்திய மக்களும் இணைந்து போராடுவதன் மூலமாக மட்டுமே தில்லியரசு இலங்கை மீது நிறுவியுள்ள வல்லரசு வல்லாளுமையையும், படை வழித் தேசிய ஒடுக்கல்களையும் வெட்டியெறிய முடியும்.

## ஈழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய நிலை:

தமிழீழ விடுதலைப் போராட்டம் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. தமிழீழ மக்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே ஏதிலி(அகதி)களாக்கப் பட்டுள்ளனர். தமிழீழம் இந்தியப் படையினரால் சுடுகாடாக மாற்றப்பட்டுக் கொண்டே வருகிறது.

எனினும் இன்று தமிழீழம் இந்திய அரசப் படையினர்களுக்கு ஒரு புதைகிடங்காக மாறி வருகிறது. ஈழ மக்கள் மீது நம்பிக்கை கொண்ட இயக்கங்களும், புலிகள் இயக்கமும் இணைந்து இந்தியப் படையினரின் படை ஒடுக்கல்களை எதிர்த்துப் போராடி வெட்டியெறிந்து வருகிறார்கள். தில்லியரசுக்கு முழு அடிமைகளாக மாறிவிட்ட இயக்கங்கள் காட்டிக் கொடுக்கும் வேலையில் ஈடுபட்டுவரும் போதிலும் முற்போக்கு ஆற்றல்கள் பீறிட்டெழுகின்றன. அவற்றுடன் புலிகள் இயக்கம் இணைந்து தமிழீழத்தை வென்றெடுக்கும்.

அப் புலிகள் இயக்கம் முன்னர் கூறியது போல்,

"போராடி அரத்தம் சிந்தி நாமே நமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும். நமக்கு வேறு வழியில்லை. ஒன்று அடிமைகளாக அழிந்தொழிய வேண்டும். அல்லது போராடித் தன்னுரிமையுடன் வாழ வேண்டும். இதுதான் எமது அரசியல் தலையெழுத்து." எனும் அடிப்படையில்,

"ஒரு தன்னுரிமையான, இறைமையுடைய தனியரசை அமைப்பதன் மூலமே தமிழீழ மக்களின் தேசிய இனச் சிக்கலுக்கு நிலையான தீர்வு ஏற்படும். தன்னுரிமையான தமிழீழமே எமது அசைக்க முடியாத அரசியல் இலக்கு. எமது தாயகத்தை மீட்டுத் தன்னுரிமையான தனியரசை அறிவிக்கும் (பிரகடனப்படுத்தும்)வரை நாம் தொடர்ந்து போராடியே தீருவோம்."

எனக் கூறியதற்கேற்ப, இந்தியக் கூலிப் படைகளை எதிர்த்துப் போராடும்; போராட வேண்டும்.

ஏனெனில், அதன் அரசியல் இலக்கு புலிகளின் **தாகம் தமிழீழத் தாயகம்.** மலர்க தமிழீழம்! வெல்க தமிழீழ மக்கள் விடுதலைப் புரட்சி!!

— (முற்றும்)

## ஓர் அறிவிப்பு!

'தமிழ்நிலம்' புதிய வடிவில் கிழமைதோறும் வெளிவரவும் எல்லா வகையிலும் மேன்மேலும் இதன் பொலிவும் வலிவும் வளரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. நம் தமிழின மீட்புக்கு இதுவே சிறந்ததொரு வாளாகவும் கேடயமாகவும் திகழ்வதாகும். அனைத்து நிலைகளிலும் நம் அன்பர்கள் பெரிதும் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

அன்பர்கள் ஆங்காங்கு நடைபெறும் இயக்கச் செய்திகளையும், தமிழின விழிப்புத் தொடர்பான செய்திகளையும், இன மீட்புக் கட்டுரைகளையும் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகிறோம்.

# உள்ளம் நடுங்குகிறது!

அன்புமிக்க பாவலரேறு ஐயா அவர்களுக்கு.

வணக்கம். தமிழ்நிலம் 107-இல் சேக் அப்துல்லா போலத் தங்களை, (பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை) சிறையில் வைக்கப் போவதாய்த், தாங்கள் எழுதிய செய்தியைப் பார்த்து மிகமிக அச்சமும், கவலையும் ஏற்படுகின்றன. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், தமிழகத்தில் ஞாயம் கூற இன்றைய சூழலில் ஒருவரும் இல்லையே! தமிழறிஞர் ஒருவரைப் பார்ப்பனர்கள் திட்டம் போட்டு முடக்கினால் தமிழகம் என்னாகும்? தமிழினத்தையும், தமிழ் மொழியையும் வடவர் அழித்துக் கொண்டிருப்பது, தெளிவாகவும், வெளிச்சமாகவும் தெரிகிறது. ஐம்புலன் கொண்டு உணரும் அக்கொடுஞ்செயலைத் தமிழகத்தில் எவராவது வடவர் உணரும் படியும், அம்முயற்சிகளை அவர்கள் கைவிட எம்முயற்சியும் செய்ய வில்லையே. இந்நிலையில் தங்களுக்கு ஓர் இடையூறு வந்தால் என்ன செய்வது நான் இப்போது தனித்து விடப்பட்டுள்ளேன், எனக் கூறியதும் என்னைக் கவலை கொள்ளவைக்கிறது. இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்தியப் பார்ப்பனர் வல்லாண்மையான ஆளுமையில் தமிழர்கள் அல்லல்பட வேண்டுமோ; தெரியவில்லையே? எனவே தங்களுக்கு ஓர் இடையூறு வந்தால் என்ன செய்வது எனச் சிந்தித்துப் பார்த்தேன். பெருங்கவலையாக இருக்கிறதே தவிர, ஒருவழியும் தென்பட வில்லை. மூன்று இதழ்களையும் எவராலும் நடத்த முடியாதே; என்ன செய்வது? பெரும் பொருளியல் நெருக்கடியிலும் தங்களைப் போன்று, மான உணர்வோடு இதழ்களை நடத்தலாம் எனக் கனவிலும், கற்பனையிலும் காண முடிய வில்லையே! ஆகவே தாங்கள் எதற்கும் அணியமாக இருப்பதுபோல இதழ்கள் தடையின்றி நடக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திட வேண்டுகிறேன்.

கலைஞர் அவர்களின் சிலை சுக்குநூறுக உடைக்கப்பட்டதற்கு இந்நாள் வரை தமிழன் ஒருவனும் வாய்திறக்கவில்லை. நேரு சிலையில் ஒன்றும் நடக்க வில்லை, தமிழனகப் பிறந்த, மூப்பனர், சிதம்பரனர் ஆகியவர்கள் அளவில்லாக் கவலைப்பட்டுப் பலபழிகளைச் சுமத்தினர். ஏறத்தாழ 25 தமிழர்களைப் பிடித்துச் சிறையில் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையல்லவா இங்கு நிலவுகிறது. கலைஞர் சிலை உடைப்புச் செய்தி மட்டும் வந்தது.

கஞ்சி கிடைத்தால் போதும், காட்டிக் கொடுப்போம் என்று அடிமை வாழ்வில் இருப்பவர்கள், எங்கே தங்களைப் போன்ற உணர்வுடையவர்களை மதிக்கப் போகிறார்கள்? இன உணர்வும், தமிழ் மொழிப் பற்றும் தமிழகத்தில் இருக்கின்றனவா எனப் பகலில் விளக்குப் போட்டுத் தேடினாலும், கிடைக்கா. இருப்பதாக எங்கும் காண முடியவில்லை 25 பேர் சிறையில் வாடுகிறார்கள். எந்தத் தமிழ் இதழும் கண்டனம் தெரிவிக்கவில்லை. காரணியம் என்ன என்று ஆய்வு செய்யவில்லை.

தமிழின உணர்வு இருப்பதாய்க் கூறும் அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் வாய்மூடிக் கிடக்கின்றன. எனவே தூய்மையான மொழி, இன உணர்வோடு நாட்டுப்பற்றும் உடையவர்கள் தமிழகத்தில் வாழ்ந்து தொண்டாற்ற இயலாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. சிந்திப்பவர்கள் கூட பேச அஞ்சி விட்டார்கள். அதனால்தான் இராசீவ் செய்தியாளரிடம் 'இலங்கைத் தமிழன் வேறு, இந்தியத் தமிழன்வேறு' என இங்குள்ளவர்களுடைய அடிமைத் தனத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதனால் இதழ்களின் வருங்கால நிலைகளைப் பற்றிச் சிந்தித்து நல்ல முடிவை வைத்துக்கொள்ள வேண்டும். வேறு யாவராலும் சிந்திக்க இயலவே இயலாது. பார்ப்பனரான இராசீவும், அவருடைய அடிமைகளும், தங்களுக்கு இடையூறு செய்யவே செய்வார்கள் என்பதில் ஐயமே இல்லை. அச்சம் ஏற்பட்டு உள்ளம் நடுங்குகிறது.

தமிழ் நிலத்தில் இராசீவ் என்ற தலைப்பில் வெளிவந்த பாவலர். கொ. செ. சின்னப்பனார் அவர்கள் எழுதியது போல, மூப்பனர், சிதம்பரனர் போன்றவர்களின் இரண்டகச் செயல்களையும் எழுதவேண்டும். கட்ட பொம்மன் வரலாற்றில் எட்டப்பன் பெற்ற இடத்தை அவர்களும் பெறட்டும்.

வணக்கம்.

தங்கள் அன்புமிக்க
— **அதியமான்**, தாழையூற்று.

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கங்கையிலிருந்து நீர்கொண்டு வந்தமைக்காகக் கங்கை கொண்ட சோழன் என்ற பட்டம் இராசராசனுக்குச் சூட்டப் பட்டதென்றால், கடாரம் (இப்பொழுதைய பர்மா, மலேசியப் பகுதிகள் என்பர்.) கொண்ட சோழன் என்ற பட்டம் இராசராசசோழனின் மகன் இராசேந்திர சோழனுக்குச் சூட்டப் பட்டதேன்? **கடாரத்திலிருந்து மண்ணுங்கட்டியைக் கொண்டு வந்தான் என்ற காரணத்தாலா** 'கடாரம் கொண்ட சோழன்' எனப் பட்டம் பெற்றான்? கடார நாட்டைக் கொண்டான் என்ற காரணத்தாலேயே அப்பட்டம் பெற்றான்.

முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைக்க முற்படுவது போல, வட இந்திய இந்திரா தமிழ் மன்னனின் வெற்றிகளை மறைத்திடவும், வரலாற்று உண்மைகளை மாற்றிடவும் முனைந்தார். வட இந்தியர் தமிழினத்தின் மேல் எத்துணைக் காழ்ப்புணர்வு கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தமிழர்கள் இதிலிருந்து தேர்ந்து தெளிதல் வேண்டும். 0

Scanned with CamScanner

# வெற்றி பெறப் போவது தி.மு.க. வா? அ.தி.மு.க. வா? ஏதுவாயினும் தமிழுக்குக் காவல் தேவை!

-- கீதா. உதயகுமார், ஐதராபாது.

விரைவில் நடக்கவிருக்கும் சட்ட மன்றப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுத் தமிழகத்தில் ஆட்சியை நிறுவப் போவது இரண்டில் ஒரு கட்சியே என்ற எண்ணத்தைத் தமிழகமக்களில் பெரும்பான்மையோர் கொண்டுள்ளனர். என் எண்ணமும் அதுவே. நான், தற்போது தமிழகத்தின் வடவெல்லைக்கு அப்பால், ஆந்திர மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு தமிழ்ப்பெண். **தமிழ், தமிழர் நலன் குறித்து உண்மையான அக்கறையுடன் வாழ்பவள்.** அரசியல் சார்பற்றவள். காய்தல் - உவத்தல் அற்ற முறையில் என் கருத்துகள் சிலவற்றைத் ''*தமிழ்நிலம்*'' இதழ் வழியே வெளியிடும் நோக்கத்துடன் இக்கட்டுரையை வரையத் துணிகிறேன்.

தமிழையும், தமிழ்ப்பண்பாட்டையும் பேணி வளர்த்தல், இந்தி மொழியின் வல்லாண்மையை அடக்குதல் என்ற இரு கொள்கைகளையும் அடித்தளமாகக் கொண்டு மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், இருபத்தோர் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் திராவிடக்கட்சியின் ஆட்சியை முதன் முதலாக நிறுவினர். ***இந்தத் ''திராவிடம்'' என்ற சொல் என்னைப் பொறுத்தவரை ஒரு தெளிவற்ற, மயக்கம் தரும் சொல்லாகும். மொழி ஆய்வாளர்களுக்கு மட்டுமே இதன் பொருள் தெளிவாகும். தமிழகத்திற்கு வெளியே, குறிப்பாக ஆந்திர, கேரள, கருநாடக மாநிலங்களில் இச்சொல்லுக்கு மதிப்பு கிடையாது.*** தமிழரின் தாய்மையை அம்மக்கள் உணர்ந்தவர் அல்லர். வடமொழியே தங்கள் மொழிகளுக்குத் தாய் என்று பேசி வருகின்றனர். இந்நிலையில் தமிழக அரசியல் கட்சிகள் மட்டும் ***திராவிடம், திராவிடர்*** என்று சொல்லிக் கொண்டு தெலுங்கு, மலையாள, கன்னட மொழிகளைக் கட்டி அழுது கொண்டிருப்பது ஏன்? விளங்கவில்லை. பால் திரிந்து தயிராகிறது; தயிர் மீண்டும் பாலாக முடியாது. தமிழிலிருந்து பிரிந்த இம்மொழிகள் மீண்டும் எக்காலத்திலும் தமிழாக மாறு. எனவே தமிழகத்தில் இனி ஆட்சியை நிறுவுவோர் தமிழ்நலத்தில் மட்டிலுமே அக்கறை செலுத்த வேண்டும். ***தி. மு க, அ. தி. மு. க. அரசுகள் பின்பற்றி வந்த இருமொழிக் கொள்கை பழுதுடையது.*** தமிழைக் கட்டாய இரண்டாவது பாடமொழியாகத் தமிழகப் பள்ளிகளில் (தமிழ் பயிற்று மொழியாக இல்லாத பள்ளிகள்) கடந்த இருபது ஆண்டுகளாக ஆக்காததினால், தமிழை முறையாகப் பேச, படிக்க, எழுதத் தெரிந்த இளந்தலைமுறையினரின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளிகளின் எண்ணிக்கை கூடி வருகிறது. இங்கெல்லாம் தமிழ் இரண்டாவது கட்டாயப் பாடமொழியாகக் கூட இல்லையென்றால் தமிழை யார் பயில முன்வருவர்? ***மும்மொழித் திட்டத்தைப் பின்பற்றும் பிற மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகள் கட்டாயப் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.*** தமிழகத்திலோ, தமிழுக்கு இணையாகப் பிற மாநில மொழிகளும் பள்ளிகளில் வைக்கப்பட்டுள்ளன. ***எனவே பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிமுகப் படுத்திய இரு மொழிக் கொள்கை, பள்ளிகளைப் பொறுத்த வரை தமிழுக்குக் காவலனாக அமையாமல், காலனாக அமைந்துள்ளது.***

''திராவிடம்'' என்ற சொல்லைப் போலவே ''மொழிச் சிறுபான்மையினர்'' என்ற சொல்லும் தமிழகத்தைப் பொறுத்தவரை தெளிவற்றதாகும். தமிழக அரசியல் வரலாற்றின் ''தமிழ் இருட்டடிப்புக் காலமான'' தெலுங்கு நாயக்கர் ஆட்சியில் (கி. பி. பதினாறும் நூற்றாண்டிலிருந்து, வெள்ளையர் ஆட்சிக்காலம் வரை) மண்ணின் மொழியான தமிழ் வீழ்ச்சியடைந்தது. தெலுங்கும், வடமொழியும் அதன் இடத்தைப் பிடித்துக் கொண்டன. தமிழிசை ஒதுக்கப்பட்டது. பல தமிழ்க்கலைகள் சீரழிந்தன. ''தோட்டியிலிருந்து தொண்டைமான் வரை'' தெலுங்கரே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில், பல தெலுங்குக் குடும்பங்கள், மொழிவெறி பிடித்த நாயக்க மன்னர்களால் தமிழகத்தில் குடியமர்த்தம் செய்யப்பட்டன. இவர்கள் போதாது என்று, பட்டு நெசவு செய்யும் சௌராட்டிர மொழி பேசுவோரும், கன்னடியரும் கூட நாயக்க மன்னர்களால் குடியமர்த்தம் செய்யப்பட்டனர். நாயக்கருக்கு முன் தமிழகத்தில் ஆட்சியை நிறுவிய முசுலீம்களினால் உருது பேசுவோரும், நாயக்கர் ஆண்டபோதே, தஞ்சை மண்ணைக் கைப்பற்றிய மராத்தியர் ஆட்சியினால் மராத்தி மொழி பேசுவோரும், தமிழகத்தில் குடியேறினர். ஆங்கிலேயர் ஆட்சியின் போது மலையாளிகளும், வடமொழிகள் பேசுவோரும் பல வழிகளில் நுழைந்தனர். அன்று முதல் இன்று வரை தமிழகத்தின் வளங்களைத் தமிழருக்கு இணையாக மேலாக நுகர்ந்து வருகின்றனர். ஆனால் தமிழ் இதுவரை அவர்களது வீட்டு மொழியாகவில்லை. தமிழக அரசியல் கட்சிகளில் புகுந்து கொண்டு ''தமிழ், தமிழ்'' என்று மேடை முழக்கம் செய்கின்றனர். வீட்டிற்கு வந்து வேறு ஏதோ ஒரு மொழியை விடாமல் பேசித் தாய்மொழிப்பற்றை ஏமாளித்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

தமிழருக்குக் காண்பிக்கின்றனர். உகாதியையும், தமிழ்ப் பண்பாட்டிற்குத் தொடர்பில்லாத பிற பண்டிகைகளையும் தவருமல் கொண்டாடி வருகின்றனர். தமிழகமாகிய ஆண்டிமடம் இவர்களாலும், தமிழ்மொழிப் பற்றே இல்லாத் தமிழராலும் சீர்குலைந்து நகைப்பிற்கு இடமாகிவிட்டது.

வள்ளுவர் கோட்டங்களோ, தமிழ்ப் பல்கலைக் கழகமோ, உலகத்தமிழ் மாநாடுகளோ தமிழை வளர்த்து விடா. **அகரச்சுவடி நிலையில் பள்ளிகளில் தமிழ் இல்லாதபோது அறிவியல் நிலைக்குஅ்து எவ்வாறு தாவி விடும்? (வ.செ. குழந்தைசாமிகள் கவனிக்க! — இதழாசிரியர்.)** தமிழகப் பள்ளிகளில் பயிலும் மாணவர் தமிழ் கற்காத போது, கடல் கடந்து மோரிசியசு தீவில் வாழும் தமிழ்க்குடும்பங் களுக்குத் தமிழ் தேவைதானு? சற்று எண்ணிப் பாருங்கள். (தமிழ்ப் பல்கலைக் கழகமும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும் கவனிக்க — இதழாசிரியர்.)

ஆட்சியில் அமர்ந்தபின் இவர்களது தலைமையிலான அரசு செய்ய வேண்டிய பணி வெற்றிக் கொக்கரிப்புகளோ, பிறந்த நாள் கொண்டாட்டங்களோ அல்ல. தமிழகத்தின் தீராத தண்ணீர் தட்டுப்பாட்டுத் தீர்விற்கு நிலையான வழிகள், தமிழகத்தைத் தொழில் மயமாக்குதல், கல்வி,வணிகம், தொழில்,கலை, வழிபாடு,அரசியல் போன்ற எல்லாத் துறைகளிலும் தமிழே முதன்மை பெறுதல், தமிழ்ப் பள்ளிகளில் ஆங்கிலத்தைச் செம்மையான முறையில் கற்பித்தல் (இதனுல் ஆங்கிலப் பள்ளிகளை நாடுவோரின் எண்ணிக்கை நாளடைவில் குறையும்) தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை தளராமல் கைப்பற்றுதல், அரசியல் வரவுகளை மனத்தில் கொள்ளாமல், தமிழை ஆங்கிலம், மற்றும் பிற மொழிப் பயிற்றுப் பள்ளிகளில் கட்டாயப்பாடமாக்குதல், அவர்களது கட்சிகளில் இருக்கும் தமிழரல்லாத பிற மொழி பேசுவோரை உண்மையான தமிழராக்குதல் (தமிழை வீட்டு மொழியாக ஏற்று அவர்கள் தம் செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்கட்டும்), தமிழக மண்ணில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்படாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசாத மக்களை மட்டும் மொழிச் சிறுபான்மையினராகக் கணக்கில் கொண்டு இந்திய அரசியல் சட்டப்படி என்னென்ன சலுகைகள் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமோ, அவற்றை அவர்களுக்கு அளித்தல், கி. பி. பதினுரும் நூற்ருண்டில் அரசியல் மாற்றத்தினுல் தமிழுக்கு ஏற்பட்ட தாழ்ச்சியை அதே அரசியலைக் கொண்டு நீக்குதல், ஊழல் அற்ற முறையில் அரசுத்துறைகளை நடத்துதல், தமிழகத்தை எல்லா நல் வழிகளிலும் பிற மாநிலங்களுக்கு முன்னேடியாக ஆக்குதல் இவையே இவர்களின் ஆட்சியின் குறிக்கோள்களாக அமையட்டும். தமிழகத்தில் இவர்கள் ஆட்சி நிலைபெற இவையே வழிமுறைகள் ஆகும்.

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயல்தான் பெரிது என்ருல், அந்தக் கூட்டு கொள்ளையடிப்புகள் மட்டும் செயல் இல்லையோ?

முறைப்படி பார்த்தால் இந்த நாட்டையே கொள்ளையடிக்கும், வெளிநாடுகளுக்கு விலை போக்கிக் கொண்டிருக்கும் இந்துசாக்கள், சூரிகள், அசிதா பச்சன்கள், வின் சாட்டாக்கள் போன்றவர்களன்றே தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தப்பட வேண்டியவர்கள்! இவர்களெல்லாரும் அரசர்கள் போல் இந்நாட்டு ஏழை மக்களின் வரிப் பணங்களையன்றே சுரண்டிக் கொண்டுபோய் வெளிநாட்டு வைப்பகங்களில் தேக்கி வைத்துள்ளார்கள்! இவர்களுக்குப் பாதுகாப்பளித்து விட்டு, தம் மக்கள் உரிமைக்குப் பாடுபடும் இளைஞர்கள் மேலன்றே கடும் கருப்புச் சட்டங்களைப் பாய விட்டிருக்கின்ருர்கள்!

உண்மையாக நடுநிலையாகத் தீர்ப்புக் கூற வேண்டு மென்ருல், இப்பொழுதுள்ள நிலையில், இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் ஊறு விளைவிப்பவர், கேடு செய்பவர் இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவே! அவர்தாம் முதன்முதலில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வைக்கப் பட வேண்டியவர்! அவர் அடக்கப்பட்டு விட்டால், நாட்டிலுள்ள அத்தனைக் கிளர்ச்சி நிலைகளும், எழுச்சி உணர்வுகளும் விரைவில் சரியாகப் போய் விடும் என்பது நம் அசைக்க முடியாத கருத்து! 0

## அதிகாரம் கையிலிருந்தால் எதையும் செய்யலாம்!

"அதிகாரம் கையில் இருந்தால் யாரையும் குற்றஞ் சாட்டி விடலாம். அவர்களுக்கு எதிராக எந்தச் சான்றையும் சான்ருளர்களையும் (சாட்சிகளையும்) உருவாக்கி விடலாம். வேண்டுமானுல் சொல்லுங்கள — நாளையே நான் **'இந்திராவைக் கொன்றது இராசீவ்தான்'** என்னும் வாய் மூலத்தை வாங்கித் தருகின்றேன்."

"என்மேல் சாட்டப்பட்ட சையத் மோடியின் கொலை வழக்கைக் கண்டு நான் அஞ்சவில்லை. இது மட்டுமன்று. இன்னும் 10 கொலை வழக்குகளைப் போட்டாலும் சந்திக்க அணியமாக இருக்கிறேன். சிறைச்சாலை,உறுப்புச்சிதைவு(சித்திரவதை) ஆகியவற்றைக் கண்டு நான் அச்சப்பட மாடேன், ஆனுல் இராசீவின் வெல்விளியை (சவாலை) எந்த நிலையிலும் சந்தித்து முறியடிக்க உறுதியுடன் இருக்கிறேன். இராசீவை அமைதியுடன் செயல்பட விட மாட்டேன்.. தொடர்ந்து போராடுவேன்"

— விளையாட்டு வீரர் சையத் மோடி வழக்கில் குற்றஞ்சாட்டப் பெற்ற, உத்தரப் பிரதேச முன்னுள் அமைச்சரும் (சனமோர்ச்சா) மக்கள் பேரணித் தலைவரும் ஆன சஞ்சய்சிங் (ஆக24 இல்) இலக்னே செய்தியாளர்களிடம் கூறியவை. 0

Scanned with CamScanner

தொடர்: 4

இதழ் 109-இன் தொடர்ச்சி.

# தமிழகத்தில் புதிய குடியரசுப் புரட்சி!

1964-இல் அனைத்து இந்திய நிலையில் ஏற்பட்ட பிளவை ஒட்டி சி.பி. ஐயிலிருந்து சி.பி.ஐ-எம் உருவானது. இக்கட்சியும் புரட்சி நிலை அரசியல் வேலைத் திட்டத்தை முன்னெடுக்காமல், பாராளுமன்றச் சேற்றில் நுழைந்து தமிழகத் தொழிலாளி இனத்துக்கு இரண்டகம் செய்தது. சி.பி.ஐ — சி.பி.எம். ஆகிய போலிப் பொதுவுடைமைக் கட்சிகள் இந்தியா மற்றும் தமிழக ஆளும் இனத்தின் கூட்டாளியாகத் தமிழக விடுதலையைத் தடுத்தன.

பொதுவாக இந்தியாவின் அரசியல் - பொருளியல் அமைப்பைச் சரியான முறையில் மதிப்பீடு செய்து, அதற்கேற்ற திட்டத்தை முன் வைக்காமல் போனதன் விளைவாகவும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் (தேசிய இனங்களின்) தனித்தனியான தன்மைகளைப் புரிந்து, அத்தன்மைகளுக்கேற்ற செயல் திட்டங்களை முன் வைக்க முடியாமல் போனதன் விளைவாகவும், தன் புரட்சிக் கடமைகளை இறுதிவரை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. அனைத்து இந்தியா அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட பின்னடைவு, உடைவு தமிழக எம். எல். கட்சியிலும் எதிரொலித்தது. தமிழகக் கட்சிக்குள்ளும் தழைத்தோங்கி வளர்ந்து வந்த வரட்டுக் கருத்துகள் மற்றும் புரட்டல் கருத்துகள் போன்ற நிலைப்பாடுகள் வளர்ந்து வந்ததனால், தமிழ்நாடு கட்சியும் பல குழுக்களாக உடைந்து போயின. ஒவ்வொரு குழுவும் தங்கள் தனித்தன்மையை நிலை நாட்டிக் கொள்ள பல்வேறு வடிவிலான போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றன. இப்போராட்டங்களில் சில புரட்சி வேட்கையை ஊக்குவித்தன. மற்றும் சில குழுக்களின் போராட்ட வடிவங்கள் பாராளுமன்றச் சாய்க்கடையில் புதைய நேரிட்டன. மேற்கூறிய போராட்டங்களால் — எதுவுமே தமிழகத்தின் உண்மையான சூழ்நிலையைப் புரிந்து இனப்பிரிவுப் போராட்டத்தை வளர்த்தெடுக்க வாய்ப்பின்றிப் போய்விட்டது.

பிரிட்டிசு வல்லரசு இந்தியா முழுவதையும் தன் ஆளுமையின் கீழ்க் கொண்டு வருவதற்காக இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு நடுவங்களைப் பயன் படுத்தியது. அதில் முகாமையானவற்றுள் சென்னையும் ஒன்றாகும். இதன் விளைவாகக் குடியமர்த்த ஆட்சி முறையின் கீழ் தொழில்கள் சென்னை நகரத்தில் விரிவடைந்த பின், மதுரை, கோவை போன்ற நகரங்களிலும் மற்ற பகுதிகளிலும் பஞ்சாலைத் தொழில்கள் உருவாயின. இத்தொழில்களில் பெருவாரியாகப் பிரிட்டிசு முதலாளிகளுக்குச் சொந்தமாக இருந்தன. தமிழகத்தில் வணிகத் தொழிலில் ஈடுபட்டு வந்த முதலாளியப் பிரிவினம் பிரிட்டிசாரிடம் கொண்ட வணிகஉறவின் அடிப்படையில் தரகு முதலாளியப் பிரிவினமாக வளர்ந்தது. 1947-க்குப்பின் தமிழகத் தரகு முதலாளியப் பிரிவினம் பிற நாட்டு முதலாளியப் பிரிவினத்துடன் கூட்டுச் சேர்ந்து புதுக்குடியிருப்புச் சுரண்டல் முறையின் அடிப்படையில் தமிழகத்தில் புதிய கனவகைத் தொழிற்சாலைகளை நிறுவி விரிவடையச் செய்தது. இதன் விளைவாகக் கனவகைத் தொழிலுக்குத் தேவையான சிறு தொழில்களைத் தவிர்த்து மற்ற எல்லாச் சிறு தொழில்களையும் கெட்டழியச் செய்து அழித்து வருகின்றன.

தமிழக மக்களின் தனித்தன்மையையும், தேவைக்கான அடிப்படையில் தொழில் உருவாக்கத்தைப் பெருக்காமல் புதினமாக்குகின்ற பெயரால் வல்லரசு நாடுகளின் நலன்களுக்கு ஏற்றவகையில் கனவகைத் தொழில்களும் மற்ற தொழில்களும் நடத்தப்படுவதால் தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகின்றது. தொழில் மற்றும் பொருளியல் பின் தங்கிய சார்புத்தன்மை கொண்டதாக இருப்பதால், ஒரு சில கனவகைத் தொழிற்சாலைகள் வளர்ச்சியடைந்து, மரபு முறையாக வளர்ந்து வந்த நெசவு மற்றும் சிறு பட்டறைத்தொழில்களும், பஞ்சாலைகளும் இழுத்து மூடும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. வல்லரசு நாடுகளும், இந்தியா மற்றும் தமிழக அதிகாரப் பிரிவுத் தரகு முதலாளிகளும் நடுவண் அரசு மூலமாக ஆளுமையையும், சுரண்டலையும் நடத்துகின்றன.

உலக வைப்பகம் போன்ற வேற்று நாட்டு நிறுவனங்களின், நடுவண் அரசின் கட்டுப்பாட்டிலும் தொழில் துறையும், உழவுத் தொழிலும் இருப்பதால், இவற்றின் வருமானங்கள் மூல முதலாகத் திரண்டு மக்கள் நலன்களுக்குப் பயன்படுத்துவதற்குப் பகரமாக வல்லரசு நாடுகள் வட்டியாகவும், வரிப் பணமாகவும் கொள்ளையடித்துச் செல்கின்றன. மேலும், அனைத்து இந்தியா தமிழக அதிகாரத் தரகு முழுவுடைமை (ஏகபோக) முதலாளியப் பிரிவினமும் மூல முதலைக் குவித்து வைத்துள்ளது. நடுவண் அரசு தமிழக மக்கள் மீது இந்தியைத் திணிப்பதின் மூலமாகவும் அதிக வரித்தண்டல் செய்வதின் மூலமாகவும் கடும் சுரண்டலை நடத்துகின்றது.

தமிழகத்தில் 18-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இருந்த காணியாட்சி உழவு விளைவு முறையை ஒழித்து இரயத்துவாரி, மகால்வாரி முறையை, பிரிட்டிசு வல்லரசு கொண்டு வந்து இருந்தாலும் சாதிய நில முதலாளியக் குமுக அடிப்படையை மாற்ற முடியவில்லை நில முதலாளியத்துடன் நெருக்கமாகக் கூட்டு வைத்துக் கொண்டு தன் சுரண்

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்)

# ஐயந்தான்! ஐயந்தான்! ஐயந்தானே!

பாவலர். சின்னப்பனார்.

கொலைகாரன் இராசீவ்தான் ஈழத்தில் தமிழினத்தை
கொன்றேதான் குவிக்கின்றான், இரக்க மின்றி!
உலகத்தின் ஒன்றியமே! அறிந்தும்நீ பேசாத
ஊமைபோல் வாய்திறவா திருக்க லாமா?
நிலமீதில் உன்நெறியை மீறித்தான் திமிரோடு
நடக்கின்ற மாக்கொடிய கரிசன் தன்னின்
தலைக்கனத்தை அடக்கிடவே நடவடிக்கை எடுக்காமல்
தாழ்த்தமேன் செய்கின்றாய்? சாற்று வாயே!

அயல்நாட்டிற் கேகியிவர் அங்கிருக்கும் தமிழினத்தை
அழித்திடுதல் அறந்தானா? நயன்மை தானா?
பயலிவனின் கொட்டத்தை புயலெனவே ீறித்தான்
பாய்ந்தடக்க வேண்டாமோ? விரைந்தே நீதான்
கயவன்செய் கொடுஞ்செயலை நயன்மையென் —
[றேயெண்ணிக்
கைகட்டி வேடிக்கை பார்க்கின்றாயா?
வியனுலகப் பேரவையே! எமதுஐயம் நீங்கிடவே
வெளிப்படையாய் இன்றேநீ விளம்பு வாயே!

அதிகாரம் படையுரிமை இருந்துமின வெறியனைநீ
அடக்காமல் விட்டுவைத் திருப்ப தாலே
குதியாட்டம் போடுகிறான்! ஆணவமாய்ப் பேசுகிறான்
கொம்பனெனத் தன்னையவன் எண்ணி விட்டான்!
மதியாமல் உன்னுடைய சட்டத்தை மிதிக்கின்றான்;
மாத்தரைக்கே ஏதத்தை விளைவிக் கின்றான்.
எதனையிவன் செய்தாலும் நடவடிக்கை எடுக்காமல்
இருக்கின்ற கமுக்கத்தைக் கூறு வாயே!

வையத்தில் அமைதியினை நிலைநாட்டத் தோற்றுவித்த
மாக்கழகத் தின்கடமை இவன்போன் றாரை
நையப்புடைத் தேபற்கள் தமைப்பிடுங்கல் என்பதனை
நினையாமல் நீமறந்தே விட்ட தாலும்,
பையலிவன் பற்களையுன் படையனுப்பிப் பிடுங்காமல்
பார்த்துக்கொண் டேகாலம் கழிப்ப தாலும்
ஐயந்தான்! எமக்குன்மேல் ஐயந்தான்! நீயிவனை
அடக்குகிற நாள்வரையில் ஐயந் தானே!

எப்பக்கம் குதித்திடலாம் என்றெண்ணி மதில்மீதில்
இருக்கின்ற பூனைபோல் இருந்தி டாமல்
முப்படைகொண் டேயீழ மக்கள்தமை மாய்க்கின்ற
முழுவெறியன் பக்கமா, நீ? "இன்றே நாம்தாம்,
தப்பித்தோம் பிழைப்போமா?" என்றேங்கித் தவிக்கின்ற
தமிழீழ மக்களது பக்கம் தானா?
அப்பக்கம் இப்பக்கம் என்றுன்வாய் திறந்தேதான்
அறிவிக்கும் வரையுன்மேல் ஐயந் தானே!

---

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

டலுக்கு அதை ஒரு குமுக அடிப்படையாகப் பயன்படுத்திக் கொண்டது அது. இவ்வாறு தமிழக உருவாக்க ஆற்றல்களின் வளர்ச்சிக்கு விலங்கிட்டுத் தடுத்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் தமிழகப் பொருளியலை அனைத்துலகச் சந்தையுடன் ஒன்றிணைத்தது. வல்லரசுகள் நில முதலாளியத்தைக் கட்டுப்படுத்தி உருமாற்றமடையச் செய்தன.

(தொடரும்.)

---

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள் !

1) தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 28**

உடனடியாக ஒரு கொள்கையைச் செயல்படுத்த முடியாத பொழுது, அந்தச் செயலுக்குரிய சூழலை உருவாக்குவது சிறந்தது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 110.

நூல் அஞ்சல்

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

பெறுநர்:
திரு. ! திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5

TN/MS (C) 657

Scanned with CamScanner